**Life Insurance from LIC**
For Tax Benefit & Life Insurance! Apply Now to Get insured & Save Tax
www.licindia.com/Insurance_Plans

**AOL தமிழ்**

Ads by Google

Ads by Google Tamil Nadu Medical Dina Thandi Tamil News Paper Tamil Murasu



தினமணி

March 4, 2008



Axill Ads



Friday December 10 2004 08:50 IST

## 'தாள் புத்தக பதிப்புக்கு விடை கொடுக்கும் ஆராய்ச்சி மாணவரின் மின்-புத்தக பதிப்பு'

காரைக்குடி, டிச. 10: மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து எழுத்து அச்சுகள் பல்வேறு பரிணாம மாற்றங்களைப் பெற்றன. இன்றைய அறிவியல் வேகத்தில் கணினி அறிவு இல்லாதோர்கூட எளிய வகையில் நூல் படிக்க உதவியாக மின்-புத்தகம் பதிப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக தமிழ்த்துறை ஆராய்ச்சி மாணவர் சி. சிதம்பரம் (28).

தமிழ் கற்போர் கணினி அறிவியல் பெறுவது என்பது சற்றே கடினம். ஆனால், சிதம்பரம் கணினியிலும் ஈடுபாடு கொண்டதால், புதிய மென்பொருள் உதவியுடன் நூல் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற கோயில்களான பிள்ளையார்பட்டி, பட்டமங்கலம் தட்சிணாமூர்த்தி, குன்றக்குடி, திருக்கோஷ்டியூர், அரியக்குடி உள்ளிட்ட பல்வேறு கோயில்களின் வரலாறு பற்றிய செய்தியும் படமும் அடங்கிய மின்-புத்தகம் (குறுந்தகடு) பதிப்பித்து வியக்க வைத்துள்ளார்.

மிகப் பெரிய பதிப்பகத்தினர் மின்-புத்தகம் பதிப்பித்தாலும், தனிப்பட்ட ஒருவர் அதுவும் தமிழ் ஆராய்ச்சி மாணவர் மின்-புத்தகம் பதிப்பித்து தமிழ்மொழியை உயர்த்தி இருக்கிறார்.

சுற்றுலா பயணிகளுக்கு எளிய வகையில் 'முதல்வன்' என்ற குறுந்தகட்டில் நூலை உருவாக்கி கோர்வையாகத் தொகுத்துப் பதித்துள்ள சிதம்பரம் இதற்கென சிறப்பு மென்பொருளை கையாண்டு தயாரித்துள்ளார். முதல்முறை யானதும் மற்றவர்களுக்கு இது வழிகாட்டுதலாகவும் அமைந்த பதிப்பாகக் கருதப்படுகிறது.

குறுந்தகடின் சிறப்பு என்னவெனில், கணினி அறிவு வேண்டும் என்பதில்லை.

கணினியில் குறுந்தகட்டைப் பொருத்தியவுடன் தானே செயல்பட்டு திரையில் படத்துடன் செய்திகள் படிக்கின்ற வகையில் ஓடத் தொடங்குவது சிறப்பு மென்பொருளின் ஏற்பாடு என்கிறார் சிதம்பரம்.

நாம் இதுவரை தாள்களில் அச்சேற்றி புத்தகமாக உருவாக்கி வைத்துள்ளோம். அதற்கு ஆயுட்காலம் என்று வைத்துக் கொண்டால் அதிகபட்சமாக 50 ஆண்டுகள் என வைத்துக் கொள்ளலாம். ஆனால் மின்-புத்தகம் காலத்தால் அழியாதது.

மின்-புத்தகத்தை உருவாக்கி இணையதளத்தில் ஏற்றிவிட்டால், உலகத்தில் எந்த பகுதியைச் சேர்ந்த தமிழரும் படித்துப் பயன் பெறலாம். வருங்கால சந்ததியினருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இவரது முதல்வன் நூல் தாளினாலாகிய புத்தகமாகவும் வெளியிடப்பட்டுள்ளது. பதிப்பகத்திற்கும் முதல்வன் என்றே பெயரிட்டு தனது முதல் முயற்சியை காட்டியுள்ளார். இவரது நூலுக்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆசியுரை வழங்கியுள்ளார்.

கவிஞர் அர. சிங்காரவடிவேலன், அழகப்பா பல்கலை. முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேரா. தே. சொக்கலிங்கம் ஆகியோர் அணிந்துரை வழங்கியுள்ளனர்.

Ads by Google Dinakaran Kumudam Dina Thandi Tamil Murasu




Newindpress - Indiavarta - Andhra Prabha - Kannada Prabha - Malayalam Varikha - AP Weekly - Cinema Express - Tamilan Express

This site is managed by Express Network Private Ltd.
No part of this site should be used in any other media without prior permission.
PRIVACY POLICY
e-mail: info@dinamani.com